பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 25 செவ்வாய்க்கிழமை (08.02.2011) பக்கங்கள் 12 ஓசை - 131

உங்கள் மண்ணில் எங்கள் சேவை
SriLankan
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA (C/423)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

# புலம்பெயர் தமிழர்களை அரவணைக்கும் கோத்தபாய

## அரசின் புது வியூகம்




(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களை அரவணைத்துச் செயற்படவும், அதன் மூலம் புலிகளின் சர்வதேச வலையமைப்பில் சேதத்தை விளைவிக்கக்கூடியதுமான புதிய செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு புதிய வியூகம் ஒன்றை வகுத்துச் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளராகச் செயற்பட்ட கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் மிக முக்கிய சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவிகளை வழங்க வேண்டும் எனவும் இச்சந்திப்புக்களின் போது கேட்டுக்கொண்டார் (11ஆம் பக்கம் பார்க்க)



# யாழில் வேட்புமனுக்கள் நிராகரிப்பு

# அதை எதிர்த்து வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

**நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்காக வடபகுதியில் ஆளும் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவினால் 20 மேன்முறையீட்டு மனுக்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.** (11ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் வீதி விபத்து; குடும்பஸ்தர் ஒருவர் பலி!

(கரவெட்டி)

கரவெட்டி தெற்கு-மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று மதியம் 1.00 மணிக்கு இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பாரவூர்தி ஒன்றே வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி குடும்பஸ்தர் மீது பாய்ந்துள்ளது.

இதில், சின்னத்துரை துரைராஜா (வயது-42) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே விபத்தில் (11ஆம் பக்கம் பார்க்க)

நீதிமன்ற வாயிலில்...



# தேர்தல் ஒத்திவைப்பு; அது சாத்தியமில்லை

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வெள்ள நிலைமையை காரணம் காட்டி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கும்படி சில அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள் கேட்டிருந்தாலும், இது தொடர்பில் தீர்மானம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது. தேர்தல்கள் ஆணையாளர் திட்டமிட்டப்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 17 இல் நடத்த விரும்புகின்றார் என தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

சென்ற மாதம் முற்பகுதியில் கிழக்கு, மத்திய, ஊவா, (11ஆம் பக்கம் பார்க்க)

## வழமைக்குத் திரும்பியது யாழ்-கொழும்பு பஸ் சேவை

(ஊர்காவற்றுறை)

யாழ்-கொழும்பு போக்குவரத்துச் சேவைகள் மீளவும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக யாழ்-கொழும்பு ஏ-9 ஊடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

மழைவெள்ளம் காரணமாக பல சிறிய குளங்கள் உடைப்பெடுத்து வீதியின் குறுக்காக வெள்ள நீர் பாய்ந்தமையால் போக்குவரத்தினைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டதாகவும், (11ஆம் பக்கம் பார்க்க)

# கலவை இயந்திரத்தில் கோளாறு; கட்டடத் தொழிலாளர் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கே. கே எஸ். வீதியில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது சீமெந்துக் கலவை இயந்திரத்தின் குழாயில் ஏற்பட்ட வெடிவிபத்து காரணமாக பணியாளர்கள் எட்டுப்



பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவமானது நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சிங்கள மற்றும் முஸ்லிம் (11ஆம் பக்கம் பார்க்க)

# மனிதாபிமானப் பணியில் குதிக்கிறார் கே.பி.

(கொழும்பு)

நேர்டோ (North-East Rehabilitation and Development Organisation - NERDO) ஒரு போதும் அரசியல் அங்கீகாரத்தினைத் தேடாது என புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளராகச் செயற்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார். அத்துடன், புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியுதவியுடன் செயற்படும் நேர்டோ என்ற அமைப்பு மனிதாபிமானப் பணிகளில் மாத்திரமே ஈடுபடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து கொழும்பில் இருந்து வெளியிடப்படும் ஆங்கில ஊடகமான ஐலண்ட் பத்திரிகையில் Shamindra Fer dinando எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்றிருந்த கே.பி அங்கு தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது, தனக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியுதவியுடன் செயற்படும் நேர்டோ மனிதாபிமானப் பணிகளில் மட்டும் ஈடுபடும் எனவும் கூறியுள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் மீண்டும் மழை; விடாது துரத்தும் அவலம்

## பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஓரளவு ஓய்ந்திருந்த மழை நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பித்ததால் வெள்ளம் வடிந்த இடங்கள் முழுவதும் மீண்டும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தாழ்வான பிரதேசங்கள் மீண்டும் வெள்ளக்காடாகக் காணப்படுவதாகவும், 130 நலன்புரி நிலையங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நலன்புரி நிலையங்கள் பாடசாலைகளில் இயங்குவதால் அனைத்துப் பாடசாலைகளும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென அனர்த்த நிவாரண அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் நேற்று வந்து சேர்ந்துள்ளதாக வவுனியா மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் சீனி, தேயிலை, நுளம்புச்சுருள், சிறுவர்களுக்கான உடைகள், படுக்கைப் போர்வை, குடிதண்ணீர் போன்றன அடங்குகின்றன.

இதைவிட நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு சமைத்த உணவுகளை வழங்க சமூக சேவைகள் அமைச்சு அனுமதியளித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிப்பொருட்கள் போதுமானதாக இல்லை. மேலும் உதவிகள் தேவையாக உள்ளது.

எனவே மனிதாபிமான அடிப்படையில் தொண்டு நிறுவனங்கள் இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (39)


### சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (017)


## நெல் அறுவடை மும்முரம்

(கரணவாய்)

கரவெட்டி, கரணவாய், மண்டான், வல்லை ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

எனினும் போதியளவு கூலியாட்கள் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகக் கூலியாட்கள் அருவி வெட்டுவதற்கு 300 - 350 ரூபா வரை கூலி வாங்குவதாகத் தெரிவிக்கின்றனர். விவசாயிகளே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## கரையொதுங்கிய படகு


(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் ஆட்கள் எவரும் இல்லாத நிலையில் படகு ஒன்று கவிழ்ந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக நிலவிவரும் அசாதாரண காலநிலையினால் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனையறிந்த இப்பகுதி மீனவர்கள் சிலதினங்களாக கடலுக்குச் செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதி மீனவர்கள் வந்த படகாக இருக்கலாம் எனவும், இப்படகில் வந்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றி எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

## யாழ். நகரப்பகுதியில் நவீன மலசலகூடம்




(ஊர்காவற்துறை)

யாழ்ப்பாண நகரப் பகுதியில் யாழ். மாநகரசபையினால் புதிதாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நகரப் பகுதியின் மையப் பகுதியில் வடபிராந்திய போக்குவரத்து சேவை பேருந்து நிலையப் பகுதியில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி மலசலகூடம் 10 தனி அறைகளாகப் பிரிக்கப்பட்டு 8 மலசலகூடங்களும், 2 குளியல் அறைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மலசலகூடத்தின் அமைப்பு முற்றாக பிளாஸ்ரிக் பிற்றிங்கில் காணப்படுவதுடன், உடனுக்குடன் கழிவுகளை வேறு இடங்களுக்கு அகற்றக்கூடியதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இம்மலசலகூடத்தினைப் பாவிப்பதற்கு 5 ரூபா மாநகரசபையினால் அறவீடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)


# கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## இறால் தொழிலுக்கான அனுமதி

எமது சமாச எல்லைக்குட்பட்ட ஆனையிறவு, சுண்டிக்குளம், காஞ்சிபுரம், பேப்பாறைப்பிட்டி வரையான கடல்நீரேரிப் பகுதிகளில் நடப்பாண்டிற்கான இறால் தொழில் சம்பந்தமாக கடந்த ஜனவரி 7ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாகக் கடந்த காலங்களைப் போன்று இறால்கூடு கட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி பரீட்சார்த்தமாக இறால் கூடு கட்டப்பட்டு 21.02.2011 அன்றைய தினம் பரிசீலனை செய்யப்பட்டு பொதுச்சபைத் தீர்மானத்திற்கமைவாக இறால்கூடு கட்டுவதற்கான திகதி உத்தியோகபூர்வமாகச் சமாசத்தினால் அறியத்தரப்படும். இதனைக் கருத்திற்கொண்டு எமது சமாச எல்லைக்குட்பட்ட இணைச் சங்கங்களான 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கித் தவறுகள் இடம்பெறாவண்ணம் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இதற்கமைய அனுமதிக்கப்படும் திகதியின் பின்னர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவு முகவர்கள் தங்களுக்கான உரிய அனுமதிகளைப் பெறும் பொருட்டு எதிர்வரும் மார்ச் 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் முல்லை, பரந்தன் வீதி, புளிம்பொக்கணைச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மேற்படி சமாச அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

☆ மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, குளிரூட்டி வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் தொழிலில் ஈடுபடுவோர் அனைவரும் கடந்த 2010 ஆம் ஆண்டின் அனுமதியுடனும் அனுமதியின்றியும் ஏற்றுமதியினை மேற்கொண்டு சமாச சங்க வளர்ச்சிக்கு நிதி செலுத்தத் தவறியவர்கள் அனைவரும் தங்களது நிலுவைகளினைச் சீர்செய்து சிட்டைகளினைப் பெற்றுக்கொள்ளவும்.

☆ சமாசத்தின் இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பொதுமுகாமையாளர்,**
**கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

**பரந்தன்/முல்லைவீதி,**
**புளியம்பொக்கணை.**
**தொடர்புகளுக்கு:**
**0770891497,**
**0777939496**

(C/428)


## வடமராட்சியிலிருந்து கொழும்பு நோக்கி பஸ்

பருத்தித்துறை இ.போ.ச பேருந்து சாலையிலிருந்து மீண்டும் கொழும்புக்கான பஸ் சேவை நேற்றிரவு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை முன்பு நடைபெற்று வந்த போதிலும் சீரற்ற காலநிலையினால் வடமராட்சிப் பகுதியில் வீதியால் வெள்ளம் மேவிப் பாய்ந்ததாலும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பெய்த அடைமழையாலும் தடைப்பட்டது.

எனினும் தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தையடுத்து பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (100)

## சிசுவின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவின் பெரிய கல்லாறிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு பின்புறமாகவுள்ள வைத்தியசாலை வீதியின் நீரோடையிலிருந்து பெண் சிசுவொன்றின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த கும்பாபிஷேகத்தின் மணவாளக்கோல சங்காபிஷேகத் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருவதைக் காணலாம். (52)**



**யாழ். பாண்டியந்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் திருமஞ்சம் வீதிவலம் வருவதைக் காணலாம். (52)**

## வாகனப் பதிவுகள்; பாவனையாளர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

சிறிய 49சிசி ரக மோட்டார் சைக்கிளினை தவணைக் கொடுப்பனவு முறை மூலம் கொள்வனவு செய்தவர்கள் உரிய ஆவணங்களுடன் வருகைதந்தால் அவர்களுக்கான பதிவுகளை தாம் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தவணைக் கட்டண முறை மூலம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்தவர்களுக்கான உரிய ஆவணங்களை வழங்குவதற்கு இம்மோட்டார் சைக்கிளினை விற்பனை செய்த சில முகவர் நிலையங்கள் மறுத்துவருவதாக மோட்டார் திணைக்களத்தில் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்தவர்கள் தெரிவித்ததாகவும், அவர்கள் உரிய ஆவணங்களைப் பெற்றுவந்தால் அவர்களுக்கான பதிவுகளை தாம் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மெதுவாகப் பேசு. அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.

-வள்ளலார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## வேண்டாம் ஆயுதக்கலாசாரம்

எந்த ஒரு நாட்டில் ஆயுதக்கலாசாரம் மேலோங்கி வருகிறதோ அதனால் அந்நாட்டுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் பாரிய அச்சுறுத்தலுக்கு ஏதுவாக அமைந்துவிடும்.

மூன்று தசாப்த காலமாக உள்நாட்டில் நடைபெற்ற பாரியயுத்தமும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பாரிய அழிவுகளும், அவலங்களும் சிறந்ததொரு உதாரணமாக அமைகிறது.

யுத்தம் முடிவடைந்து நாடு படிப்படியாக அமைதிச்சூழலுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் நேரத்தில், சில வன்முறைச்சம்பவங்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தலைதூக்க ஆரம்பித்துள்ள நிலையில், அது மீண்டுமொரு ஆயுத கலாசாரமாக தலைதூக்கி விடுமோ என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் துளிர் விடவே செய்யும்.

இந்த அச்ச உணர்வைத் தவிர்ப்பதற்கு நாம் எவரது உதவியையும் நம்பியிராது அதற்கேற்றால் போல் எம்மை நாமே தயாராக்கிக்கொள்ளவேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்

ஆயுதக்கலாசாரம் தலைதூக்கியிருந்த காலகட்டத்தில் தமது கணவர்மாரையும், பிள்ளைகளையும் இரை கொடுத்தவர்கள் மீண்டுமொரு யுத்தக் கலாசாரம் எம்மை ஆட்டிப்படைக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று ஆணைக்குழுமுன் கண்ணீர் மல்கக் கூறியதோடு, எம்மிடம் இருந்து பிரிந்து போனவர்களை மீட்டுத்தாருங்கள் என்ற அவர்களின் அவலக்குரல்கள் இன்னமும் ஓய்ந்தபாடாக இல்லை.

உண்மையில் இழப்புக்களை எவராலும் ஈடுசெய்ய முடியாதென்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இயற்கையாக ஏற்படும் இழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும், நாம் ஒன்றும் செய்யமுடியாது. இந்நிலையில் ஆயுதக்கலாசாரத்தினால் ஏற்படக்கூடிய அழிவுகளில் இருந்து எம்மைக்காப்பாற்றக்கூடியவர்யார்? ஒருவருமே இல்லை என்ற பதிலையே கடந்த கால அனுபவ ரீதியாக நாம் பெற்றுக்கொண்டோம்.

இந்த அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட நாம் மீண்டும், மீண்டும் சிக்கல்களில் மாட்டிக்கொள்வதைத்தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆயுதக்கலாசாரம் முடிவுக்குவந்ததை அடுத்து நாட்டின் பல பகுதிகளும் அபிவிருத்தி கண்டுவருவதையும் காணமுடிகிறது.

யுத்தத்திற்காகச் செலவுசெய்த பணம் இப்போது அபிவிருத்திவேலைகளுக்குப்பயன்படுவதினால், யுத்தப்பாதிப்புக்குள்ளான வடக்கு-கிழக்குப் பகுதிகள் மீண்டெழுந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

கொலைகள், கொள்ளைச்சம்பவங்களைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக மீண்டும் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிச்சோதனைகளால் சில சிரமங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இச்சிரமங்களை தமிழ் மக்கள் தொடர்ந்தும் அனுபவிப்பதை அவர்களின் தலைவிதி என்றே கூறவேண்டும்.

மக்களின் இந்தத்தலைவிதியை மாற்றியமைப்பதென்பது மிகவும் கடினமானதொரு விடயமாகவேக கருதவேண்டும்.

எந்தக்கடினமான விடயத்தையும் மக்கள் எதிர்கொள்வதற்கு அவர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும்.

இந்த ஒற்றுமையை அரசியல் லாபம் தேட முனைவோர் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்த முனைவர்களானால் அதனால் பாதிக்கப்படப் போவது ஒட்டுமொத்தமான தமிழ் மக்களே என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

-ஆசிரியர்-

# புனரமைப்பு நிறைவடையாத நிலையில் ஆரம்பமாகியுள்ள போக்குவரத்துச் சேவை



(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் 5 கண் பாலம் உத்தியோக பூர்வமாகத் திறக்கப்படாத நிலையில் அப்பாலத்தினூடாக பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதனால் மீளவும் இப்பாலம் உடையும் அபாயம் காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரசபை தெரிவித்துள்ளதாவது:

இப்பாலத்தின் நிர்மாணப்பணிகள் இன்னமும் நிறைவடையவில்லை. இரு வழிப்பாதையாக இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளதுடன் புனரமைக்கப்பட்டுள்ள இப்பாலத்தின் சீமெந்துக் கட்டுகள் பலமடைவதற்கு ஒரு மாதகாலம் அவசியம் என்றும், 21 நாட்களின் பின்னரே பாலம் சீரான போக்கு வரத்துக்கு ஏற்றதாக அமையும். ஆனால் நேற்று முன்தினம் முதல் தனியார் பேருந்துகள் மற்றும் பாரஊர்திகள் இ.போ.ச பேருந்துகள் என்பன இப்பாலத்தினூடாகப் பிரயாணம் செய்கின்றன. இதனால் இப்பாலம் உடைந்து மீளவும் புனரமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்படக்கூடும் எனத் தெரிவித்தது.

இவ் விடயத்தில் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை இப்பாலத்தினூடாக இ.போ.ச பேருந்துகள் செல்வது தொடர்பாக காரைநகர் சாலையினரிடம் கேட்டபோது, இவ்வீதி மீளத் திறக்கப்பட்டது தொடர்பாக எமக்கு எந்தவித உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன் தனியார் பேருந்துகள் மற்றும் ஏனைய வாகனங்கள் செல்வதால் நாமும் அப்பாலத்தினூடாக போக்குவரத்தை மேற்கொள்கிறோம் எனத் தெரிவித்தனர். (54)

## திருத்தத்தில் குமுதினி

(வேலணை)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான கடற்பயணத்திற்கென சேவைகளை மேற் கொண்டு வந்த குமுதினிப் படகு அடிக்கடி பழுதாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பழுதான குமுதினிப் படகினை திருத்துவதற்கென வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் ஊர்காவற்றுறையில் உள்ள இறங்குதுறைக்குக் கொண்டுவரப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## கௌரவிப்பு நிகழ்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் பொலிஸாருக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட தமிழ் பொலிஸாருக்கான கௌரவிப்பு நிகழ்வு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பாரம்பரிய மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் ஏற்பாட்டில் நேற்று முனதினம் யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருந்தது. இந் நிலையில், தமிழ் பொலிஸாருக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர் வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## புதிய வேலைத்திட்டத்தின் கீழ் மரக்கறி, பழவகைகள் விற்பனை

(கொழும்பு)

மரக்கறி,பழவகை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இடைத்தரகர்களின்றி நேரடியாக நுகர்வோர் விற்பனை செய்யும் புதிய வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளாக கமநல சேவைகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

இத்திட்டத்தின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள 556 கமநல சேவைகள் நிலையங்களுக்கு நேரடியாகக் கொண்டு வந்து நுகர்வோருக்கு சகல விலையில் இப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 10 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் முதல் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையங்களினூடாக சுமார் 13 ஆயிரத்திற்கும் அதிகமான கமக்காரர்கள் இலங்கையில் பரந்து காணப்படுகின்றனர். அத்துடன் இத்திட்டத்தின் மூலம் குறித்த பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது நோக்கமாகும்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண சின்ன வெங்காயத்தை இடைத்தரகர்களின்றி கொழும்பு கமநலசேவைகள் நிலையங்களுக்கு நேரடியாகக் கொண்டு வந்து விநியோகிக்கப்படவுள்ளது. அதன் மூலம் இலாபம் எதிர்பார்க்கப்படாது. கிடைகக்கும் சிறிய இலாபம் கமநல சேவை மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் பொருட்களை சேகரிக்கும் கமக்காரர்களுக்கும் பெற்றுக்கொடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வேட்பாளர் இலக்கங்கள் செயலகத்தில் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தல்களில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சகல கட்சிகளினதும் சுயேட்சைக்குழுவினதும் வேட்பாளர்களது இலக்கங்கள் யாழ் உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை முதல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவ் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நாடு பூராகவும் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதேவேளை இத் தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளினதும் சுயேட்சைக்குழுவினதும் வேட்பாளர்களின் இலக்கங்களும் யாழ்.உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திலேயே பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா, மி)

# மலிவான விளம்பரத்தை தேடமுற்பட்ட விமானப்படை

(கொழும்பு)

வெள்ள மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த உலங்குவானூர்தியில் பெண் ஒருவர் குழந்தையைப் பிரசவித்ததாக விமானப்படை மலிவான விளம்பரம் தேட முற்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அனுராதபுர மாவட்டம் ஹொரவப்பொத்தானையில் வெள்ளத்தில் இருந்து மீட்கப்பட்ட பெண்ஒருவர் விமானப்படையின் பெல் உலங்குவானூர்தியில் குழந்தையைப் பெற்றெடுத்ததாக விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார கூறியிருந்தார்.

ஆனால் அந்தப் பெண் உலங்குவானூர்தியில் குழந்தையைப் பிரசவிக்கவில்லை என்று மருத்துவர்கள் கண்டறிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட பெண் ஹொரவப்பொத்தானையில் உள்ள தனது வீட்டிலேயே குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார் என்றும், அதன்பின்னரே உலங்குவானூர்தியில் மருத்துவமனைக்கு ஏற்றிவரப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விவகாரத்தின் மூலம் ஊடகங்கள் மத்தியில் மலிவான விளம்பரம் தேடிக்கொள்ள இலங்கை விமானப்படை முற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனினும் இது தொடர்பாக இலங்கை விமானப்படை கருத்து எதையும் வெளியிடவில்லை.

# வீதிகளின் சிறப்பான புனரமைப்பிற்கு நவீன இயந்திரங்கள் இல்லையாம்



(யாழ்.நிருபர்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளைச் சிறந்த முறையில் புனரமைப்பதற்கு நவீனரக றோலர் இயந்திரம் இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளதென யாழ். மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த சில வாரங்களின் முன பெய்த கனமழையைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் உள்ள வீதிகள் பலவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றன.

நாம் இவ்வீதிகளைத் தார்க் கலவையிட்டு புனரமைப்புச் செய்தபோதிலும் கனரக வாகனப் போக்குவரத்தினால் தார்க் கலவை விடுபட்டு கற்கள் வெளிக்கிளம்பி பழைய நிலைக்கு மாறிவிடுகிறது.

வீதிப்புனரமைப்புக்குத் தேவையான மூலப்பொருள்கள் இருந்த போதிலும் நவீனரக றோலர் இல்லாமையினால் வீதி திருத்த வேலைகளைச் சிறப்பாகச் செய்ய முடியாதுள்ளது.

நவீன றோலர் இயந்திரம் ஒன்றைக் கடன் அடிப்படையில் புதிதாகக் கொள்வனவு செய்யவுள்ளோம். புதிய றோலர் இயந்திரம் கிடைத்ததும் வீதிப் புனரமைப்பு வேலைகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார். (10)

## வணிகர் கழகத்தின் புதிய நிர்வாகம்

(கொழும்புத்துறை)

யாழ்வணிகர் கழகத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு கடந்த 04.02.2011 அன்று நடைபெறறது.

இதில் கடந்த வருடம் பணியாற்றிய நிர்வாகத்தினரே இவ்வருடமும் சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் பொப்புலர் மோட்டார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ஜெயசேகரன் தலைவராகவும், அசோகா நகையகத்தின் உரிமையாளர் ஜனக்குமாரன் செய்லாளராகவும், சுப்பகூஸ் உரிமையாளர் ஜெயராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கல்லுண்டாய் வீதியினை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

ஓட்டுமடத்தில் இருந்து காரைநகர் செல்லும் கல்லுண்டாய் வீதி அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் கசூரினா சுற்றுலா மையத்துக்கும் செல்லும் தென்னிலங்கைப் பயணிகள் உட்பட பெருந்தொகையானோர் இவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். காரைநகருக்கான குறுகிய தூர வீதியும் இதுவாகும்.

யாழ்.நகர வீதிகள் தார்க் கலவையிட்டு செப்பனிடப்படுவது போன்று, இவ்வீதியையும குண்டு குழிகளை நிரப்பி செப்பனிடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

## விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு சனசமூக நிலையங்களுக்கு பணிப்பு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையின நிர்வாக எல்லைக்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சனசமூக நிலையங்களினது விபரங்களை சமர்ப்பிக்குமாறு வேலணைப் பிரதேசசபையின் செயலாளர் கெ.தவராசா அறிவித்துள்ளார்.

இதில் குறித்த சனசமூக நிலையங்கள் அனைத்தும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டங்களை நடத்தி புதிய நிர்வாகத்தினைத் தெரிவு செய்து அதன் விபரங்களுடன் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் அறிக்கையினையும் இணைத்து செயலாளர் வேலணைப் பிரதேசசபை வேலணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சகல சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் அவர் அறிவித்துள்ளார். (05)

## மந்த கதியில் புனரமைப்புப் பணிகள் சிரமங்களை அனுபவிக்கும் வியாபாரிகள்

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்தையின் புனரமைப்புப் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருவதால் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக நடைபெற்று வரும் சந்தைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் ஆமை வேகத்திலேயே இடம் பெற்று வருகின்றன.

இநதப் புனரமைப்புப் பணியின் தாமதத்தால் சந்தைக் கட்டடத்தில் மரக்கறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வியாபாரிகள் சிரமங்களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளம் சந்தைக்குள் தேங்குவதாலும் வியாபாரிகள் தமது மரக்கறிகளை வைத்து விற்பதற்கு உரிய இடவசதி ஒதுக்கப்படவில்லை என்பதால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (25)

# மரக்குற்றிகளைத் திருடும் முயற்சி பொதுமக்களால் முறியடிக்கப்பட்டது

(தும்பளை)

தும்பளையில் மரக்குற்றிகளைக் கடத்திச் செல்லும் திருடர்களின் முயற்சி அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டு முயற்சி முறியடிப்புச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

சந்தேகத்திற்கிடமான முறைகளில் அப்பகுதிகளில் நடமாடியவர்களின் நடமாட்டத்தை அவதானித்த மக்கள் இரவு நேரம் வந்தவுடன் தமது திருட்டுக் கைவரிசையைக் காட்ட முற்பட்டபோது காத்திருந்த மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதைத் தொடர்ந்து, கடத்திய மரக்குற்றிகளை அவர்களைக் கொண்டு தூக்குவித்து அவை இருந்த இடங்களில் போடவைத்ததாகவும், திருடர்களை இனங்கண்ட மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து கடுமையாக எச்சரித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் விழிப்புக்குழுக்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(62)

## இருளில் மூழ்கிக் காணப்படும் கொழும்புத்துறை பிரதான வீதி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் வீதி விளக்குகள் ஒளிராமையினால் இரவு நேரத்தில் வீதியில் பயணிக்கும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புத்துறை பிரதான வீதி கடந்தகால யுத்த நடவடிக்கையினால் மிக மோசமாகச் சிதைவடைந்துள்ளது. இப்பகுதிக்கூடாகவே அண்மையில் பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வளன்புரம் மற்றும் மணியந்தோட்டப்பகுதிகளுக்கு பொதுமக்கள் பயணம் செய்யவேண்டும்.

எனவே வீதி விளக்குகள் சரிவரஒளிராமையினால் வீதியில் உள்ள கிடங்குகள் காரணமாக தாம் பயணம் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (52)

## மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டும் விவசாயிகள்

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையல் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். மரக்கறி வகைகளின் விலை உயர்வை அடுத்தே விவசாயிகள் பெரும்போக மரக்கறிச் செய்கையில் அதிக அக்கறை செலுத்தியுள்ளனர்.

அனேகமான விவசாய நிலங்களில் விவசாயிகள் கத்தரி, பாவல், தக்காளி, பூசனி, கரட், வெண்டிக்காய், மிளகாய், பயிற்றை போன்ற மரக்கறிப் பயிர்களைப் பயிரிடுவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த கனத்த மழையினால்., அனேகமான விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்கள் வெள்ளத்தில் அழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

## மண்டப புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(யாழ் நிருபர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் பாலஸ்தாபன அபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஐயனார், சிவன், மூலமூர்த்திகளும் மருந்து சாத்தி மூலஸ்தான புனரமைப்பு வேலைகளும், வசந்த மண்டபப் புனரமைப்பு வேலைகளும் நடைபெறவுள்ளன. (10)





யாழ்.. தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றுவந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்கள் பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள் பற்றிய செயலமர்வின் இரண்டாம் நாள் நிகழ்வின் போது யாழ்ப்பாணத்தின் விலங்குவேளாண்மைக்குரிய "உள்ளார்ந்த வளமும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பின் கீழ் கலாநிதி ஜெ.சின்னய்யா விளக்கவுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# றோபோ தொழில்நுட்பக் கல்வி அறிமுகம் எமது மாணவர்களுக்கான வரப்பிரசாதம்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



(யாழ்நிருபர்)

ரெக் சிறிலங்கா நிறுவனம் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக றோபோ தொழில்நுட்பக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளமை எமது பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்குச் சிறந்த வரப்பிரசாதமாகும்.

ரெக் சிறிலங்கா யாழ். பிராந்தியக் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மைக்நெற் நிறுவனத்தில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ச.இரவீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில் -

ஆசியாவின் அதிசயமாக இலங்கையைக்கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் திட்டத்திற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் சகலரும் கணினி அறிவு பெற்று இலங்கையின் கணினி அறிவு வீதத்தை 100 வீதமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் றோபோ தொழில்நுடபக கல்வி வடபிரதேசத்தில் அறிமுகப்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும்.

1997, 98 காலப்பகுதியில் பாடசாலைகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. க.பொ.த சாதாரணதரத்தில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக உள்ளபோதிலும் அதனைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் கணினிக் கல்வி பற்றிய அக்கறை மாணவர்களிடத்தில் குறைவாகவே உள்ளது. பல்கலைக்கழக அனுமதிக்கு 'சற்' புள்ளி பெறுவதற்கு கணினிப்பாடம் கட்டாயமானது என்ற நிலை வந்தால் மட்டுமே இப்பாடத்தில் மாணவர்களது முழுமையான கவனத்தை எதிர்பார்க்க முடியும்.

பாடசாலைகளில் கணினிப் பாடத்தைக் கற்பதற்கு நல்ல வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனைப் பயன்படுத்திக் கணினி அறிவைப் பெறாத மாணவர்கள் பாடசாலைக் காலத்தைக் கணினிக் கல்விக்காக தவறவிட்டு விட்டோமெனப் பின்னர் வருந்தவேண்டிய நிலைமை உருவாகும்.

விண்வெளி ஆய்வு போன்ற நவீன விஞ்ஞானத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் றோபோ தொழிநுட்பம் பெரிதும் உதவும். இத்துறைகளில் உயர்கல்வியைத் தொடரவுள்ளவர்களுக்கு றோபோ தொழிநுட்பம் மிகவும் பயன் மிக்கதாக அமையும்.

பல்ஊடக தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ளவேண்டும். இத்தகைய நவீன கற்பித்தல் முறையானது கவர்ச்சிமிக்கதும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கத்தக்கதுமான கற்பித்தல் முறையாகும். ரெக் சிறிலங்கா நிறுவனத்தின் தலைவர் நிரஞ்சன் நாணயக்கார, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகவல் தொழில் நுட்ப பிரிவுத் தலைவர் எஸ்.மகேஸ்வரன் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். (10)

## வாகனங்கள் இல்லாமையால் தபால்கள் விநியோகிப்பதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபால் கந்தோரில் தபாலகளை விநியோகிக்கும் தபால் வாகனங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பிரதம தபாலக வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இவ்வாகனத்தட்டுப்பாட்டினால், தீவகப் பகுதிக்கான தபால் சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, யாழ்.பிரதம தபாலகத்தில் தற்போதுள்ள இரண்டு தபாலகங்களைப் பயன்படுத்தியே குடாநாட்டின பல்வேறு பகுதிகளுக்கும், வவுனியாவுக்குமான தபால்சேவை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். ஆஸ்பத்திரி வீதி புனரமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியை புனரமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. வீதியில் ஏற்பட்ட பாரிய குழிகள் மற்றும் சேதங்கள் என்பன கற்களால் நிரப்பப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும் மற்றும் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாகவும் பாரிய தேசங்கள் ஏற்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

இதனால் வீதியால் பயணம் செய்யும் வாகனங்கள் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

## திண்டுக்கல் லியோனியின் நகைச்சுவைப் பட்டிமன்றம்

(யாழ் நிருபர்)

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற திண்டுக்கல் ஐ.லியோனியின் நகைச்சுவைப் பட்டிமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. லியோனி தன்குழுவினருடன் கலந்துகொள்ளும் பட்டிமன்ற நிகழ்வுகள் மன்னார், வவுனியா, திருகோணமலை, புத்தளம் மற்றும் மலையகப் பகுதிகளிலும் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10)

## பயன்தரு மரக்கன்றுகள் மக்களுக்கு விநியோகம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு காணித் திணைக்களமும் எவ். ஆர். அமைப்பும் இணைந்து பயன்தரு மரக்கன்றுகளை வழங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. உற்பத்தி நடவடிக்கையை அதிகரிக்கும் நோக்குடனும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனேயே இம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் நிரந்தரமாக வாழும் மக்களின் காணிகளில் மரங்களை வளர்க்கக்கூடிய போதுமான இடவசதிகளைக் கொண்டுள்ள மக்களுக்கு இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## கழிவுப் பொருட்கள் வீசுவோர் மீது பொலிஸார் தீவிர நடவடிக்கை

(கொட்டடி)

யாழ். நகரப் பகுதியில் கழிவுப் பொருட்களை வீசுவோர் மீது பொலிஸார் நடவடிக்கையை தீவிரமாக மேற் கொண்டு வருகின்றனர்.

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் மற்றும் பொது இடங்களிலும் கடதாசிகள் மற்றும் கழிவுப் பொருட்களைக் கொட்ட வேண்டாம் என்றும் பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

கழிவுப்பொருட்களை நகரில் வைக்கப்பட்டுள்ள குப்பை போடும் கொள்கலன்களில் போடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்தக் கொள்கலன்களில் போடாது, வீதிகளில் வீசுவோர் மீது பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் போடப்படும் இந்தக் கழிவுப் பொருட்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (25)

## இன்றைய பலன்

(08.02.2011 – செவ்வாய்கிழமை) -ஆதினி-

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

விகிர்தி தை 25

இராகுகாலம் 3.35- 5.05, சுபநேரம் 11.05 -12.35, பஞ்சமி பி.ப.5.5G, ரேவதி பி.இ 3.08, சித்தாமிர்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- மேடம் :– வீணான ஆசை, முயற்சி தோல்வி, தொழிலில் சிக்கல்.
- ரிஷபம் :– தேக நலன் விருத்தி, ஆலய வழிபாடு, நினைத்ததைச் சாதித்தல்.
- மிதுனம்:– புதிய நண்பர் சேர்க்கை, நற்செய்தி, குடும்ப மகிழ்ச்சி.
- கடகம் :– குடும்பத்தில் நெருக்கம், உறவினர் வருகை, சுபச்செலவு.
- சிம்மம்:– பெரியோர் ஆசி, மேலாளர் நட்பு, தொழிலில் சிறப்பு.
- கன்னி:– தொழில் லாபம், மகிழ்ச்சி மிகுதி, சகோதரர் உதவி.
- துலாம் :– தொழில் விருத்தி, தொழில் மூலம் பயணம், ஆலய தரிசனம்.
- விருச்சிகம்:– நண்பர்கள் உதவி, செய்தியால் மகிழ்ச்சி, தொழிலில் மாற்றம்.
- தனுசு:– மேலாளர் பாராட்டு, மனைவி வழி உதவி, களியாட்ட விருப்பம்.
- மகரம் :– கற்பனை மிகுதி, நோய் விலகல், புதிய நண்பர் சேர்க்கை.
- கும்பம் :– பொருள் வரவு, புதிய வழிகளில் செலவு, மனக் குழப்பம்.
- மீனம் :– தெய்வவழிபாடு, தானதர்ம விருப்பு, களியாட்டங்களில் ஈடுபாடு.

## பருத்தித்துறை வீதியில் கீறப்படும் இரு வழிப்பாதைக்கான கோடுகள்

(தும்பளை)

வடமராட்சிப் பிரதேசத்தில் வீதி அகலிப்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவற்றை இருவழிப்பாதையாக மாற்றும் நோக்குடன், வீதிக்கு நடுவே தற்போது கோடு வரைகின்ற பணி மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இதனால் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பயணத்திற்குரிய நேரம் கணிசமானளவு குறையும் என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறைந்தபட்சம் பருதத்தித்துறையிலிருந்து யாழ். செல்லும் ஒருவர் மீளத் தனது இடத்துக்கு திரும்ப பயணநேரம் மட்டும் மூன்று மணித்தியாலங்கள் செல்கிறது. அலுவலகப் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நோயாளர்கள் எனப் பல தரப்பினரதும் ஒரு நாளின் கணிசமானளவு பகுதி பயணத்திலேயே கழிகிறது.

வீதிகளுக்குக் கோடு வரையப்படுவதன் மூலம் இப்பயண நேரம் பாதியாகக் குறைவடையும் எனப் பயணிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (62)

## கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

கோண்டாவிலில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு சிந்மயாமிசன் நிறுவனத்தினர் கல்வி உபகரணங்கள் மற்றும் பாதணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இப்பாடசாலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் ஆங்கிலம், கணிதம் போனற பாடங்களை இலவசமாகக் கற்பிப்பதற்கும் சிந்மயாமிஷன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (10)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினரர்களாகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மற்றும் மாணவர்களைக் காணலாம். (01)

# தீயசக்திகளின் தவறான பிரசாரங்களுக்கு புலம்பெயர் தமிழர் துணை போகக்கூடாது

## பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

தீய சக்திகளின் தவறான பிரசாரங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் துணை போகக் கூடாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு புலம்பெயர் தமிழர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் அழைப்பை ஏற்று அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்தப் புலம்பெயர் தமிழர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தீய சக்திகளை மௌனமாக்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய அழுத்தம் காரணமாக அரசு - கூட்டமைப்பு பேச்சு

## என்கிறது லக்பிம

(கொழும்பு)

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புடன் பேச்சு நடத்துவதாக லக்பிம செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், இனப் பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வந்தது. எனினும் இலங்கை அரசாங்கம் அதனைத் தவிர்த்தே செயற்பட்டு வந்தது.

இந்தநிலையில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவுப்படுத்தியதை அடுத்து இலங்கை அரசாங்கம் சற்று தீவிர முனைப்பைக் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக லக்பிம குறிப்பிட்டுள்ளது.

# இலங்கை தமிழ் இளைஞன் டுபாய் தலைநகரில் மரணம்

(கொழும்பு)

டுபாயின் தலைநகர் அபுதாபியில் இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவர் கடந்த 02 ஆம் திகதி திடீர் மரணம் அடைந்தார்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய ஊறணி என்ற கிராமத்தைச் சேர்ந்த பாலன் கிருபைராசா (வயது-25) என்பவரே உயிர் இழந்தவர் ஆவார்.

இவர் கடந்த 21/2 வருடங்களாக அபுதாபியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி இருக்கின்றார்.

தங்குமிடத்தில் இருந்த போது சம்பவதினம் மதியம் திடீர் நோய் வாய்ப்பட்டு இருந்தார். நண்பர்கள் இவரை அருகில் இருந்த மருத்துவ நிலையம் ஒன்றுக்குக் கொண்டு சென்றனர்.

பின் அவசர சிகிச்சைக்காக அபுதாபி மத்திய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

மதியம் 12.15 மணி அளவில் இறந்து விட்டார்.

இவர் மாரடைப்பால் இறந்து விட்டார் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரின் சடலம் தற்போது அபுதாபி வைத்தியசாலையில் உள்ளது.

சடலத்தை நாட்டுக்கு அனுப்பி வைக்க இலங்கைத் தூதரகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு தவறிவிட்டது

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

விவசாயத்திலும் மீன்பிடித் தொழிலிலும் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ள மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி சுற்றுநிருபங்களை அனுப்பியுள்ள போதிலும், கடந்த கால அழிவுகளின் போது ஏற்பட்ட அனுபவங்கள் காரணமாக அதிகாரிகள் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்குத் தயங்குவதாக அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.




அரசாங்கம் இவ்வாறான அழிவுகளின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, பொது நிகழ்வுகளிலும் பெரிய அமைச்சரவையை அமைத்து வரிச் சலுகையுடன் கூடிய வாகனங்களை இறக்குமதி செய்து அமைச்சர்களின் நலன்களிலும் அதிகளவு வீண் செலவினங்களைச் செய்வதாகவும் விஜித ஹேரத் கூறினார்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் குற்றச்சாட்டை இடர்முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர மறுத்துள்ளார்.

அரச அதிகாரிகளுக்கு நிவாரணங்களில் பணச்சிக்கல் வராதவாறு மாவட்டச் செயலாளர்கள் ஊடாகப் போதுமான நிதியைத் தாம் அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

# அசாதாரண காலநிலையால் அரசிற்கு 5000 கோடி நட்டம்



(கொழும்பு)

அதிக மழை காரணமாக வாவிகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக நட்டங்கள் இதுவரை கணக்கிடப்படவில்லை என நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாச்சதுவ, கவுடுல்ல, மற்றும் கந்தளாய் குளங்களின் நீர்மட்டங்கள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் ஜி.ஜி.ஏ.கொடலியத்த தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட அதிக மழை காரணமாக 500 க்கும் அதிகமான வாய்க்கால்கள் உடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதே வேளை நாடளாவிய ரீதியாக தாக்கம் செலுத்திய அசாதாரண காலநிலை காரணமாக 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பொருளாதார நட்டம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விபரத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதவிர அதிகமழை காரணமாக 12 லட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்து மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 700 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். வடக்கு, மத்திய, வடமத்திய ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் மழை எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் ஏப்ரல்மாதம் விடுவிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் உள்ள 1000 முன்னாள் புலி உறுப்பினர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் விடுவிக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வவுனியாவில் கட்டடம் கட்டும் பயிற்சிநெறியை முடித்த முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த 55 வீதமான முன்னாள் புலி உறுப்பினர்கள் இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 1000 பேர் கட்டடம் கட்டும் பயிற்சிநெறியை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறி முடிவுற்றதும் ஏப்ரல் மாதம் அவர்கள் விடுவிக்கப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகள் மூன்று மாதங்களுக்கு படையினரின் கண்காணிப்பிலேயே இருப்பர் என்று சிறிலங்கா இராணுவ புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் பாரியளவில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும்

## எச்சரிக்கிறார் பொருளாதார நிபுணர்



(கொழும்பு)

இலங்கையில் பாரிய அரிசித் தட்டுப்பாடு எதிர்வரும் நாட்களில் ஏற்படக் கூடும் என்று எச்சரித்துள்ளார் உள்நாட்டின் பிரபல பொருளாதார நிபுணர்களில் ஒருவரான களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிறேமா பொடி மெனிக்க.

இவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு அச்சம் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் கூறி உள்ளவை வருமாறு:-

நீடித்து வருகின்ற அடை மழை, பெருக்கெடுத்து ஓடுகின்ற வெள்ளம் ஆகியவை காரணமாக பெரும்பாலான நெல் வயல்கள் நிர்மூலம் ஆகி விட்டன.

பாரிய அளவில் நெல் வேளாண்மை பாதிக்கப்பட்டு இருக்கின்றது. உள்ளூரில் நெல் உற்பத்தி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

ஆனால் போதுமான அரிசி கையிருப்பில் உண்டு என்று தம்பட்டம் அடிக்கின்றது அரசு.

எனினும் ஏற்பட்டு இருக்கின்ற இழப்பை குறுகிய காலத்துக்குள் ஈடு செய்ய முடியாது. இழப்பைச் சமாளிக்க குறைந்தது நான்கு மாதங்கள் என்றாலும் எடுக்கக் கூடும் எனத்தெரிவித்தார்.

# 19 வயது கிரிக்கெட் போட்டித் தொடரில் ஸ்கந்தாவை வீழ்த்திய சென்.பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்று வரும் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டித் தொடரில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் அணி இலகுவாக இனிங்ஸ்சினாலும் 59 ஓட்டங்களினாலும் வெற்றி கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் எறிக் பிரதீப் ஸ்கந்தவரோதயா அணியினை முதலில் துடுபபெடுத்தாடுமாறு பணித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா அணி 28 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களினையும் இழந்து 64 ஓட்டங்களினை மட்டும் பெற்றுக் கொண்டது.

இதில் ஸ்கந்தவரோதயா அணித்தலைவர் புருஷோத்தமன் 25 ஓட்டங்களினையும், சிந்துஜன் மற்றும் தனுசன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களினையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென் பற்றிக்ஸ் அணித் தலைவர் எறிக் பிரதீப் 11 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டினையும், அஜித் டாவின் 2 விக்கெட்டினையும், கிளின்ரன், நோபேட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸ்சினை ஆடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 34.3 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 192 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டினையும் இழந்தது.

இதில் லிவிஸ்ரன் 50 ஓட்டங்களினையும் ஜெகான் 25 ஓட்டங்களினையும், ஜஸ்ரின் 22 ஓட்டங்களையும் எரிக் பிரதீப் 15 ஓட்டங்களினையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயா அணியின் சார்பில் குமுதன் 5 விக்கெட்டினையும், துவாரகன் 2 விக்கெட்டினையும், சஜ்ஜேவன், லக்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸ்சினை ஆடிய ஸ்கந்தவரோதயா அணி 21.3 ஓவர்களில் 69 ஓட்டங்களினை மட்டும் பெற்றுக் கொண்டமையினால் இப் போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி இலகுவாக இனிங்ஸ் மற்றும் 59 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

ஸ்கந்தா அணியின் சார்பில் இரண்டாவது இனிங்ஸ்சில் புருசோத்தமன் 14 ஓட்டங்களினையும் றொபேட் றொசான், துவிகரன் ஆகியோர் தலா 11 ஓட்டங்களினையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ அணியின் சார்பில் நோபேட் 6 விக்கெட்டினையும் எரிக் பிரதாப் 3விக்கெட்டினையும், கலாஸ்கர் ஒரு விக்கெட்டினையும் கைபபற்றினர்.

இரண்டு நாட்களுக்கு ஆடப்பட வேண்டிய இப்போட்டி முதல்நாள் ஆட்டத்துடனே முடிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (42)

# மேன்முறையீடு செய்ய முடிவு




(டோகா)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களான சல்மான்பட், மொகமட் ஆமிர் மற்றும் ஆஸிப் மூவரும் தமக்கு விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்து சுவிட்சர்லாந்து விளையாட்டுத் தீர்ப்பாயத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளனர்.

இதுகுறித்து மொகமட் ஆமிர் சட்டத்தரணி ஹாகீத் கரீம் கூறும் போது, எங்கள் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை எனக்கு மட்டும் அதிர்ச்சியைக் கொடுத்தது. தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளோம். சுவிட்சர்லாந்து விளையாட்டு தீர்ப்பாயத்தில் மேன்முறையீடு செய்வோம். மேன்முறையீடு செய்ய 20 நாட்கள் அவகாசம் உள்ளது. அதில் நல்ல முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

# பாகிஸ்தான் வீரர்களுக்கான தடை வரவேற்கின்றனர் அக்ரம், ஸ்ரரஸ்



(கராச்சி)

பாகிஸ்தானில் மூன்று வீரர்களுக்கும் ஐ.சி.சி. விதித்த தடை தொடர்பாக அந்நாட்டின் முன்னாள் அணித் தலைவரான அக்ரம், இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரரஸ் இருவரும் வரவேறறுள்ளனர்.

இது தொடர்பாக அக்ரம் கூறியதாவது:-

வீரர்களுக்கான தடை மிகவும் கடுமையானதுதான். இதன் மூலம் மற்ற வீரர்களுக்கு ஐ.சி.சி. பாடம் புகட்டி உள்ளது. தடை விதிக்கப்பட்ட வீரர்களுக்கு




எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மூலம் அவர்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் இடையே புகழை இழந்து உள்ளனர்.

இந்தத் தடை பாகிஸ்தானுக்கு மிகவும் கெட்ட செய்தி தான். கிரிக்கெட் ஊழலைத் தடுக்க ஐ.சி.சி. ஊழல் தடுப்பு தீர்ப்பாயம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கருதுகிறேன். மொகமட் ஆமிர் திறமை வாய்ந்த இளம் வீரர். இந்தத் தடை மூலம் அவரது கிரிக்கெட் வாழ்க்கை பாதிக்கும்.

ஆனால் இந்தத் தடையில் இருந்து நீக்கப்படுவது கடினம். உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுவதால் இந்த நேரத்தில் பாகிஸ்தான் அணிக்கு ரசிகர்கள் ஆதரவைத் தர வேண்டும். இவ்வாறு வசிம் அக்ரம் கூறியுள்ளார்.

இதேபோல் இங்கிலாந்து கப்டன் ஸ்ரரசும் ஐ.சி.சி. ஊழல் தடுப்பு தீர்ப்பாயத்தின் முடிவை வரவேற்றுள்ளார். பாகிஸ்தான் வீரர்களுக்கு விதிக்கப்பட்ட இந்தத் தடையால் முன்னாள் கப்டன் இம்ரான்கான் அதிர்ச்சி அடைந்துள்ளார். அவர் கூறும் போது, இந்த 3 வீரர்களுமே திறமை வாய்ந்தவர்கள். இவர்களுக்கு விதிக்கப்பட்ட தடையால் உணமையிலேயே அதிர்ச்சி அடைந்துள்ளேன் என்றார்.

# மாரத்தானில் சாதனை



(பார்சிலோனா)

ஒரு வருடத்தில் 365 மாரத்தான் போட்டிகளில் கலந்துகொண்டு பெல்ஜியம் வீரர் ஸ்டெபான் ஏங்கல்ஸ் சாதனை படைத்தார்.

எப்போதும் நீண்டதூரம் ஓடிக்கொண்ருப்பதே தனது வாழ்க்கை என பயணிக்கும் ஸ்டெபான் ஏங்கல்ஸ் மாரத்தான் மனிதர் என வர்ணிக்கப்படுகிறார்.

இந்த வீரர் ஸ்பானிஷ் நகரமான பார்சிலோனாவின் எல்லைக் கோட்டை தொட்டபோது, ஒரு வருடத்தில் 15 ஆயிரம் கி.மீ.,(9569 மைல்) தூரத்தை ஓடிக் கடந்த சாதனையாளராக உருவெடுத்தார்.

மாரத்தான் எனது வழக்கமான பணி என்கிறார் இந்த 49 வயது வீரர். இவர் குழந்தையாக இருந்தபோது, ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டார். கடந்த 2009ஆம் ஆண்டில் ஜப்பானிய வீரர அகினோரி குசுடா தனது 65 வயதில் 52 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுச் சாதனையாளராகத் திகழ்ந்தார்.

தற்போது ஸ்டெபான் நாள் ஒன்றுக்கு ஒரு மாரத்தான் என 365 மாரத்தான் போட்டியை எட்டியுள்ளார்.

# பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர்களால் இந்திய அணிக்கு மிகப்பெரிய பலம்

(புதுடெல்லி)



எதிர்வரும் உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் இந்திய அணியில் பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது, மிகப் பெரிய பலமாக அமையுமென, முன்னாள் அணித்தலைவர் ராகுல் டேவிட் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற விருது வழங்கும் விழா ஒன்றில் கலந்துகொண்டபோதே அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் எட்டு அணிகள் எதுவென ஒவ்வொருவருக்கும் தெரியும். உண்மையான உலகக் கிண்ணப் போட்டியென்பது இந்தக் காலிறுதிக்குப் பின்னரே நடைபெறும்.

இந்திய அணி உலகக்கிண்ணத்தை கைப்பற்றும். ஆனால் காலிறுதிப்போட்டிகளில் விளையாடும் ஏனைய அணிக்கும் திறமையை நிரூபிக்கப்படும். இந்திய அணியில் யுவராஜ் , யுசுப்பதான், சேவாக், மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர்களாக உள்ளனர். இது ஒரு முக்கியமான விடயமாகும்.

கடந்த சில வருடங்களாக இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகின்றது. பகுதிநேர சுழற்பந்து வீச்சுடைய சகலதுறை வீரர்கள் உள்ளமையானது அணிக்குப் பெரிய பலமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தடைவிதிப்பால் மனம் தளரமாட்டேன் மீண்டும் வருவேன் என்கிறார் ஆமிர்



(டோகா)

கிரிக்கெட் விளையாட 5 ஆண்டு தடை விதிக்கப்பட்டதால மனம் தளரமாட்டேன். மீண்டும் கிரிக்கெட்டுக்கு வருவேன் என்று மொகமட் ஆமிர் கூறியுள்ளார்.

ஐ.சி.சியின் தடை குறித்து 18 வயதான வேகப்பந்து வீச்சாளர் மொகமட் ஆமிர் அழுதபடி கூறியதாவது:-

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் மோசமான நாள். கிரிக்கெட் தான் எனது உலகம். எனக்கு எல்லாவற்றையும் கொடுதததது கிரிக்கெட் தான். அது இல்லாவிட்டால் நான் யாரென்று இவ்வுலகுக்கு தெரிந்திருக்க முடியாது. கிரிக்கெட்டுக்காக எனது படிப்பைத் துறந்தேன்.

வாழ்க்கையில் ஒரு கதவு அடைக்கப்பட்டால், மறுபக்கம் 100 கதவுகள் திறக்கும். இந்தத் தண்டனையால் எல்லாமே முடிந்தது போல் தோன்றும் எனது தலைவிதி எப்படி இருக்கும் என்பது யாருக்குத் தெரியும்? நான எனது தைரியத்தை இன்னும் இழக்கவில்லை.

இரண்டு நோபோல் வீசியதற்காக 5 ஆண்டுகள் தடை என்பது மிகவும் கடினமான நடவடிக்கை. இதனை நான் எதிர்பார்க்கவில்லை.

பாகிஸ்தானில் நிறைய கிரிக்கெட் மைதானங்கள் உள்ளன. அவற்றில் பயிற்சி மேற்கொள்வேன். சொல்லப்போனால் முன்பைவிட இரண்டு மடங்கு கடினமாக உழைப்பேன். தொடர்ந்து உடல் தகுதியுடன் இருப்பேன். மீண்டும் கிரிக்கெட்டுக்கு வருவேன்.

10 ஆண்டு தடை விதிக்கப்பட்ட சல்மான்பட் கூறுகையில், நான் அப்பாவி. இந்தத் தடை நியாயமற்றது. எனது மீதான தடை நீக்கப்படும் வரை நான் ஓயமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையே ஐ.சி.சி. தலைமை செயல் அதிகாரி ஹரூன் லார்கட் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிரிக்கெட்டில் ஊழலை ஒரு போதும் சகித்துக் கொள்ளமாட்டோம். தீர்ப்பாயத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் தீர விசாரித்து முடிவு எடுத்துள்ளனர். உறுதியான ஆதாரங்கள அடிப்படையில் வீரர்கள் மீது தடை நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இந்தத் தண்டனை மற்ற வீரர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

# நாற்பது மில்லியனில் அலங்கரிப்புச் செலவு

(கொழும்பு)

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டியை முன்னிட்டுத் தற்போது கொழும்பு நகரம் அலங்கரிக்கப்பட்டு வருவதாக கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் ஓமர் காமில் தெரிவித்தார்.

மேலும் தற்போது ஆர்.பிரேமதாஸ மைதான சுற்றுவட்டாரப் பகுதிகளில் அலங்கரிப்புகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அலங்கரிப்பு வேலைகளுக்காக 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேச பாகிஸ்தான் தயாராகவே உள்ளது

## ஜனாதிபதி சர்தாரி


(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினையிலிருந்து பாகிஸ்தான் ஒரு போதும் பின்வாங்கமாட்டாது. அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் பேசுவதற்குப் பாகிஸ்தான் தயாராகவே உள்ளது.

எனினும், காஷ்மீர் மக்களின் அனுமதி இல்லாமல் காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேசமாட்டோம் என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

என்றாவது ஒரு நாள் காஷ்மீர் மக்களுக்கு வெற்றி கிடைக்கும். இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் இருக்க பாகிஸ்தான் விரும்பு கிறது. ஆனால், அது சமத்து வம் மற்றும் கொள்கை கோட்பாடுகளுடன் இருக்க வேண்டும்.




காஷ்மீர் பிரச்சினையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க பாகிஸ தான் விரும்புகிறது. எனவே பிரச்சினைக்குரிய காஷ்மீரை இந்தியா கைவிட வேண்டும். இல்லாவிடில் இந்தியா-பாகிஸ் தான் பேச்சு வார்த்தையில் கடும் விளைவு ஏற்படும்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நிறுவுனரும், முன்னாள் பிரதமருமான பூட்டோ மற்றும் அவருக்கு பின் பிரதமர் பதவி வகித்த அயூப்கான் ஆகியோரும் காஷ்மீர் பிரச்சினையில் உறுதியாக இருந்தனர்.

மறைந்த முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ இஸ்லாமிய மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்பினார். இவ்வாறு சர்தாரி பேசினார்.




# 2 பெண் ஊடகவியலாளருக்கு ருவண்டாவில் சிறைத்தண்டனை



ருவண்டாவில் இரண்டு பெண் ஊடகவியலாளர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இன பேதத்தை தூண்டும் வகையில் செய்திகளை பிரசாரம் செய்த குற்றத்திற்காக குறித்த இரண்டு பெண் ஊடகவியலாளர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. உம்யுராபியோ பத்திரிகையின் ஆசிரியரும், பத்திரிகையின் செய்தியாளருமே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

எக்னஸ் நுக்ஸி என்ற ஆசிரியரும், சயித் முக்காய்பிபி என்ற செய்தியாளரும் முறையே 17 ஆண்டுகள் மற்றும் 7 ஆண்டுகள் என்ற அடிப்படையில் சிறைத் தண்டனை அனுபவிக்க உள்ளனர். அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்யும் வகையில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ருவண்டா ஜனாதிபதி போல் குகாமியை விமர்சனம் செய்வோருக்கு எதிராகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப் படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் ஊடக சட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# கைது செய்யப்படலாமென்ற அச்சம் சுவிஸ் பயணத்தை கைவிட்டார் புஷ்


(வொஷிங்டன்)

கைது செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக சுவிட்சர்லாந்துக்கான பயணத்தை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கைவிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யூ புஷ். இவர் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாநகரில் ஒரு அறக்கட்டளை ஏற்பாடு செய்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சி வருகிற 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ள ஜார்ஜ் டபிள்யூ புஷ் தயாராக இருந்தார்



ஆனால், அவர் மீது ஜெனீவா கோர்ட்டில் மனித உரிமைகள் அமைப்பு ஒரு வழக்குத் தொடரந்தது.

அவர் அமெரிக்க அதிபராக இருந்த போது குவான்ட்னமோ வளைகுடா பகுதியில் தீவிரவாதிகள் என சந்தேகப்பட்ட நபர்களை சித்திரவதை செய்து மனித உரிமை மீறியுள்ளார். எனவே அவரைக் கைது செய்ய வேண்டும் எனத் தெரிவித்து இருந்தனர்.

அதை ஏற்றுக்கொண்ட கோர்ட்டு அவரை கைது செய்யும்படி சுவிட்சர்லாந்து அரசுக்கு உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து அங்கு சென்றால் கைது செய்யப்படுவோம் என்ற அச்சம் அவருக்கு ஏற்பட்டது. இதனால் சுவிட்சர்லாந்து பயணத்தை அவர் திடீரென ரத்து செய்தார். ஆனால், சுவிட்சர்லாந்து வந்தால் அவர் கைது செய்யப்பட மாட்டார். விருந்து விழா நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் மகிழலாம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

# எகிப்தில் இணக்கப்பாடு

(கெய்ரோ)

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக எகிப்து அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை பதவி விலகுமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் சந்தர்ப்பத்தில் கட்சிகளுக்கு இடையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவது தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து குழுவொன்றை நியமிக்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. புதிய துணை ஜனாதிபதி ஓமர் சுலைமானுக்கும், முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

எவ்வாறெனினும், அரச தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் இதுவரையில் தகவல் வெளியிடவில்லை. இதேவேளை ஒரு வாரத்திற்குப் பின்னர் எகிப்தில் நேற்று வங்கிகள் இயங்கியதாகவும் வங்கிகளில் பெருமளவான மக்கள் பணத்தை மீளப் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# குறள் சொல்லும் கதைகள் -27

இன்பத்துப் பால்

## பேரின்பம்

'நீ வித்தியாவின் வீட்டுக்குச் செல்லும் பொழுது என்னையும் அழைத்துச் செல்வாயா....?' என்று கேட்டான் நகுலன்.

கஜேந்திரன் அவனின் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை. யோசித்துக் கொண்டிருந்தான்.

'உன்னைக் குழப்பி விடுவேன் என்றுயோசிக்கிறாயா...? என்னைக் கூட்டிக்கொண்டு செல்ல விருப்பம் இல்லாவிட்டால் நான் தரும் கடிதத்தையாவது அர்ச்சகாவிடம் கொடுக்கச் சொல்லி வித்தியாவிடம் கொடு. பிறகு அவள் தரும் பதில் கடிதத்தை வாங்கி வந்து தா. இதை ஒரு முறைக்குச் செய்தால் போதும். பிறகு நான் உன்னைக் கேட்கமாட்டேன். நகுலனின் குரல் தளர்ந்தது.

'வீணாய் ஏன் கற்பனை செய்கிறாய். வித்தியாவின் வீடு சன நெருக்கமுள்ள இடத்தில் உள்ளது. அதோடு சுற்றிவர இருக்கிறவை வித்தியாவின்ரை நெருங்கிய உறவினர்கள். நான் அடிக்கடி அங்கு செல்வதை வித்தியா விரும்புவதில்லை. அத்துடன், வித்தியாவின் தாயார் கடினமான போக்குடையவர். அடிக்கடி நான்அங்கு செல்வது அவருக்குப் பிடிப்பதில்லை. மாதத்தில் ஒரு முறை அவா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்வா. அந்த நாள் விரிவுரைகள் இல்லாத நாளாக இருந்தால் உன்னை நான் கூட்டிக்கொண்டு செல்கிறேன்' என்றான் கஜேந்திரன்.

இதைப்பற்றி வித்தியாவுடன் கதைத்து அவளின் சம்மதத்தைக் கேட்ட பின்பு தான் என்னால் சொல்ல முடியும். குறைநினைக்காதை எமது பிரதேசத்ததைப் பற்றி உனக்கத் தெரியும் தானே ஒரு பெண்ணோடை இரண்டு நாள் கதைத்தால் பல கற்பனைகளை உருவாக்கிக் கதைக்கிறது எமது மக்களின் பொழுது போக்கு என்றான் கஜேந்திரன்.

'நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறன். அர்ச்சகாவைக் கண்டு ஓரிரு நிமிடங்களென்றாலும் கதைக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கு'.

'ஒரு நாளைக்கு தோழிகளை விட்டு விட்டு அர்ச்சகாவைக் கூட்டிவரும்படி வித்தியாவுக்குச் சொல்லுறன். கோயில்கள் தான் காதலர்கள் சொர்க்கம்' என்றான் கஜேந்திரன்.

'அர்ச்சகாவைக் காணாத நேரத்தில் நரகத்தில் இருப்பதைப்போல இருக்கிறது' என்றான் நகுலன்.

'உலகம் தான் நரகலோகம் என்று பெரியவங்கள் கூறுவார்கள். இந்த நரக உலகத்தில் ஒருவனுக்குஇன்பமும் மகிழ்ச்சியும் அளிப்பது காதல். இளமையில் பெற்றோர் மீது உள்ள காதலால் தான் வாழ்வில் கல்வி, முன்னேற்றம் என்பன ஏற்படுகின்றன. வாலிபப் பருவத்தில் காதலியால் தான் அனைத்தும் ஏற்படுகின்றன. வாடிய உயிர்களைத் தளிர்ப்பிப்பது காதலியின் அரவணைப்பு. வாழ்க்கையில் பிடிப்பேற்பட்டு முன்னேற வைப்பது காதலியின் அன்பான வார்த்தைகள். நொந்த மனதிற்கு ஆறுதலளித்து, உற்சாகமூட்டுவது காதலியின் இனிமையான வார்த்தைகள். இந்த உண்மையை நான் வித்தியாவைக்காதலித்த பின்பு தான் உணர்ந்து கொண்டேன். மற்றவையெல்லாம் அர்த்தமற்ற வெளிஷேங்கள் தான். உண்மையான காதல் எமது பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்' என்றான் கஜேந்திரன். நகுலன் சிரித்தான். 'காதலுக்கு நீ புதிய விளக்கம் கொடுக்கிறாய்' என்றான்.

'இவையெல்லாம் என்னுடைய கருத்துக்களல்ல. எல்லாம் எமக்கு முன்பு வாழ்ந்த அறிஞர்களின் கருத்துக்கள். நீ படித்து அறியாததால் எனது கருத்துக்கள் என்று சொல்கிறாய். வித்தியாவைப் போல ஒரு பெண் உலகத்தில் இல்லை என்று தான் நான் நினைக்கிறன். அவளோடு சேர்ந்திருக்கும் வேளையில் எனது உறவினர்கள் அனைவரோடும் மகிழ்வாக எனது வீட்டில் இருந்து நான் உழைத்துச் சம்பாதித்து வாங்கி வந்த பொருளை பகிர்ந்து உண்ணும்போது ஏற்படுகின்ற இன்பம் ஏற்படுகிறது' என்றான் கஜேந்திரன்.

நான் கேட்டதற்கு நீ பதில் கூறவில்லை. நான் எழுதித் தரும் கடிதத்தை அர்ச்சகாவிடம் சேர்ப்பிப்பாயா...? என்று கேட்டான் நகுலன்.

'எழுதித்தா' என்றான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால் அம்மா அரிவை முயக்கு" (குறள் - 1107)

தன்னுடைய வீட்டில் இருந்து தான்தேடிய பொருள்களைப் பிறருடன் பகிர்ந்து உண்ணும் போது உண்டாகின்ற இன்பம்,அழகிய இந்தப் பெண்ணை தழுவும் போது ஏற்படுகிறது.

# ஸ்பெக்ட்ரம் விசாரணையைத் தாமதப்படுத்துவதற்கு முயற்சி

## முன்னாள் லஞ்ச ஆணையாளர் குற்றச்சாட்டு



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பான விசாரணையை தாமதப் படுத்த தொலைத் தொடர்புத் துறை அதிகாரிகள் முற்பட்டனர். அவர்கள் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என, முன்னாள் மத்திய லஞ்ச ஒழிப்பு மற்றும் கண் காணிப்பு ஆணையர் சின்கா கூறினார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளித்த அவர்,

2ஜி ஸ்பெக்ட்ரம் அலை வரிசை ஒதுக்கீட்டில், முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்பதைக் கைவிட்டு, ஏல முறையைப் பின்பற்ற வேண்டும் என, மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்தை கண்காணிப்பு ஆணையம் கேட்டுக் கொண்டது.

ஆனால், ஆணையத்தின் ஆலோசனையை தொலைத் தொடர்பு அமைச்சகம் புறக் கணித்து விட்டது. 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில், முறைகேடுகள் நடந்ததாக புகார் எழுந்ததால், அது பற்றி கண் காணிப்பு ஆணையம் விசாரணை மேற்கொண்டது.

ஆனால், இந்த விசாரணைக்கு தொலைத் தொடர்பு அமைச்சக அதிகாரிகள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

அதற்கு மாறாக விசாரணையை தாமதப்படுத்த முற் பட்டனர். ஆணையம் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் தராமல் இழுத் தடித்தனர். இருந்தாலும், எப்படியோ சமாளித்து விசாரணைக்குத் தேவையான ஆவணங்களை நாங்கள் பெற்றோம்.

விசாரணையின் போது, அரசின் கொள்கைகளைப் பின்பற்றியதில், பல குளறுபடிகள் நிகழ்ந்திருப்பது தெரியவந்தது. அதனால், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக நேரடி விசாரணையில் இறங்கினோம். ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில், ஏல முறையைப் பின்பற்றும்படி, ஆரம்பம் முதலே நாங்கள் கூறி வந்தோம்.

மேலும், முதலில் வந்தவர்களுக்கே முன்னுரிமை என்ற கொள்கையையும் தொலைத் தொடர்புத்துறையினர் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்துள்ளது என்பதில், எந்த விதமான சந்தேகமும் இல்லை. தகுதியில்லாத நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் தான், இந்த விவகாரம் சி.பி.ஐ., விசாரணைக்கு வந்தது எனத் தெரிவித்தார்.




## சோமாலிய கடற்கொள்ளையர்கள் இந்திய கடற்படையினரால் கைது



(கொச்சி)

லட்சத் தீவு அருகே, சோமாலிய கடற்கொள்ளையர்கள் 25 பேரை, இந்திய கடற்படையினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்த பிணைக் கைதிகள் 25 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

லட்சத் தீவு அருகே, இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐ.என்.எஸ்., திர் கப்பல் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது, அந்தப் பகுதிக்குள் மர்மப் படகு ஒன்று வந்தது. அவர்களை நிற்குமாறு இந்திய கடற்படையினர் கூறினர். ஆனால், அந்தப் படகு, நிற்காமல் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. இதையடுத்து, அந்தப் படகு நிற்காவிட்டால், துப்பாக்கிச் சூடு நடத்தப் போவதாக கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தனர். அதையும் அவர்கள் அலட்சியப்படுத்தியதால், இந்திய கடற்படையினர் வானத்தை நோக்கி சுப்பாக்கியால் சுட்டு எச்சரித்தனர்.இதையடுத்து, அந்தப் படகில் இருந்த சோமாலிய கடற்கொள்ளையர்கள் 25 பேர் வெள்ளைக் கொடியை ஏந்தியபடி சரணடைந்தனர். அந்தப் படகில் பிணைக்கைதிகளாக இருந்த 25 பேரும் மீட்கப்பட்டனர். அவர்கள் அனைவரையும் விசாரணைககாக, கடற்படையினர் மும்பை கொண்டு சென்றுள்ளனர்.

## இந்தியா கண்டிக்காதது வேதனை

(சென்னை)

இலங்கை அரசின் செயற்பாடுகளை இந்தியா கண்டிக்காமல் விட்டுள்ளமை வேதனையை அளிப்பதாக கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாகபட்டினத்தில், தமிழக மீனவர்கள் தொடர்ந்து கடந்த பல ஆண்டுகளாக சுட்டுககொல்லப்பட்டு வருவதோடு, பலர் காயம் அடைந்து உறுப்புகளை இழந்த நிலையில் வாழ்வில் பெரும்பகுதியை தொல்லைகளாக அனுபவித்து வருகிறார்கள்.

மேலும் பலர் காணாமற்போனதாக, காயம் பட்டதாக, கொல்லப்பட்டதாக சொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் அநாதைகளாக மாறி, சகிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

பல லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுக்கு மத்திய அரசு ஊக்கம் கொடுக்கிற கொள்கைகளை தான் கடைப்பிடித்து வருகிறது.

கொடூரமான யுத்தத்தை தமிழ் இன மக்கள் அழிப்புப் போராக நடத்திய இலங்கை அரசுக்கு இதுவரை 2010-11ஆம் ஆண்டில் 2 ஆயிரம் கோடி ரூபா நீண்ட காலக் கடனாகக் கொடுத்து உதவி இருக்கிறார்கள்.

பல லட்சம் தமிழ் மக்களை அழித்ததோடு மட்டும் அல்லாமல், 1 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களை முகாம்களில் அடைத்து



சித்திரவதை செய்து வருவதைக் கண்டிக்கவில்லை. ஆனால் அவர்கள் செய்யும் செயல்களுக்கு ஊக்கம் கொடுப்பதைப் போல பணத்தை வாரி வழங்கி வருகிறார்கள். இதற்கு முடிவு கட்டி ஆக வேண்டும். இலங்கைப் படுகொலைச் சம்பவத்தை உலக நாடுகள் கண்டிக்கின்றன. ஐ.நா.சபை கண்டிக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் கண்டிக்கிறது. இந்திய அரசைத் தவிர என அவர் மேலும் தெரிவித்தார்.


புலமைபெறும் மாணவர்களின் ஒரே முரசு... "கல்விமுரசு"

2011 ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்

கல்வி முரசு



தேசிய ரீதியில் தொடர்ந்து முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் பயிற்சி பெற்ற முன்னோடி வினாத்தாள்களை வெளியிட்ட வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் தேசிய ரீதியில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை நெறிப்படுத்திய பாடசாலைகளில் இருந்து பெறப்படும் வினாத்தாள்களே எமது கல்வி முரசு ஊடாக வெளிவரும்.

14.02.2011 முதல் வெளிவருகின்றது..

வாரம் தோறும் எமது புலமை முரசு மாணவர்களின் கையில்......

| திங்கள் | புதன் | வெள்ளி |
|---|---|---|
| பகுதி -I (4 பக்கம்) | பகுதி -II (4 பக்கம்) | பகுதி -I, II (விடைகளும், புள்ளியிடலும்) |

எமது கல்வி முரசின் சேவைகள் அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ....... இலவசம்

எட்டுத் திசையும் கொட்டட்டும் கல்வி முரசு

தரம்-05 மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாளைப் பெறவிரும்பும் பெற்றோர்கள் அருகிலுள்ள "தினமுரசு" விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்து உங்கள் பிரதி கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலுடன் வெற்றிபெறும் மாணவர்களுக்கு மேலும் தங்கள் புள்ளியை உயர்த்த வீட்டில் இரவு வேளைகளில் பெற்றோரின் உதவியுடன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான விசேட முன்னோடிப் பரீட்சை "கல்வி முரசு"

எம்மால் வாரம்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடாத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சி பெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சககர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள வழங்கிக் கௌரவிக்கப்படும்.




திரு.தி.சுப்பிரமணியம், ஆசிரியர், கல்விமுரசு

தினமுரசு காரியாலயம், 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.

உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.

தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................... பெற்றோர் ஒப்பம்

# வாகன உரிமையாளரின் அசண்டையீனம்

# பாடசாலை மாணவர்கள் வீதியில் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச்செல்லும் இரண்டு சிறியரக பஸ் உரிமையாளர்களின் அசண்டையீனத்தால் மாணவர்கள் எவரும் தேடுவாரற்ற நிலையில் வீதியில் நின்ற அதேவேளை, பிள்ளைகளைக் காணாத பெற்றோர்கள் பதறியடித்துத் திரிந்த சம்பவம் ஒன்று யாழ்.நகரப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.இந்து ஆரம்பபாடசாலை மற்றும் சென்பொஸ்கோ பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை ஏற்றிச் செல்லும் இரண்டு வாகன உரிமையாளர்கள் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் அவர்களை மாற்றி ஏற்றி ஒவ்வொரு பாடசாலையாக இறக்கி விட்டு வந்துள்ளனர்.

அவ்வாறு தொடர்ச்சியாகச் செய்து வந்த இருவரும், அண்மையில் சென் பொஸ்கோ பாடசாலை விட்டு மாணவர்களை ஏற்றிவந்து,யாழ் இந்து ஆரம்ப பாடசாலை முன்பாக விட்டுவிட்டு,மற்றைய வாகனம் வரும் நில்லுங்கள் என்று கூறிச் சென்று விட்டார். ஒருவாகனத்தின் உரிமையாளர்.

ஆனால் மற்றைய வாகனம் ஏற்ற வராததனால் பிள்ளைகள் நடுத் தெருவில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. நேரம் பிந்தியும் பிள்ளைகள் வீடு வந்து சேராததால் பதறியடித்த பெற்றோர் குறித்த வாகன உரிமையாளரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போது குறித்த ஒரு தொகைப் பிள்ளைகளை,ஏற்ற வாகனத்தைக் கொண்டு செல்வது தனக்கு நஷ்டத்தை ஏற்படுத்துமெனவும் எனவே பெரிய பிள்ளைகளை விட்ட பின்னர் அவர்களை ஏற்றச் செல்லும் போதே, இவர்களையும் ஏற்றி வருவேன் என அலட்சியமாகத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றுவதற்காக,வீடு வீடாகச் சென்றுகேட்டு,பிள்ளைகளை ஏற்றும் இவர்கள், பின்னர் அவர்களை பாடசாலையிலிருந்து ஏற்றி வருவதற்கு நஷ்டம் எனக் காரணம் காட்டுவது எந்த வகையில் நியாயமானதென பெற்றோர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே குடாநாட்டின் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றும் வாகனங்கள் தொடர்பாக ஒழுங்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்படவேண்டுமெனவும், அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# 500 இற்கு மேற்பட்ட கால்நடைகள் இறப்பு

(வவுனியா)

வவுனியாவிலும் முல்லைத் தீவிலும் கடந்த சில தினங்களாக கால்நடைகளின் இறப்பு அதிகரித்துள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கடந்த வாரம் குறைந்தது இரண்டு மாவட்டங்களிலும் ஐநூறு கால்நடைகள் இறந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு சரியான தரிப்பிட குடில்வசதி இல்லாமையினால் மழையில் நனைந்து அவை நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளன. சில கால்நடைகளுக்கு காலில் தொற்று நோய் ஏற்பட்டு அதன் காரணமாகவும் இறப்புக்கள் இடம் பெற்றதாக கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகளின் உரிமையாளர்கள் பலர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதினால் வீதிகளில் அனாதரவாக இறந்து கிடந்த கால்நடைகளை பிரதேசசபையினர் பணியாளர்களைக் கொண்டு உரியவகையில் புதைத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திட்டமுன்னேற்ற மாநாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு யாழ் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப் பட்ட திட்டங்கள் தொடர்பான மாவட்ட முன்னேற்ற மாநாடு ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் யாழ்.செயலகத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் யாழ்.மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# புகையூட்டல் பணியாளர்களுக்கான பாதுகாப்பு கவசம் வழங்க கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு தடுப்பு மற்றும் கிருமிகளை ஒழிப்பதற்கான புகையூட்டல் செயற்பாடுகளில் ஈடுபடும் மலேரியா தடுப்பு இயக்க நடைகண்டாய ஊழியர்களுக்கு எவ்வித தற்காப்புக் கவசங்களும் வழங்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் புகையூட்டும் பணியாளர்களே தற்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்கள் புகையூட்டலை மேற்கொள்ளும் போது அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள, காதுகளுக்கு அடைப்பான்களும் கண் மற்றும் மூக்கிற்கு கவசங்கள் அணிவதற்கான கோட் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் இந்தப் பாதுகாப்பு அங்கிகள் எதுவும் வழங்கப் படாததனால் அவர்கள் சாதாரண துணியில் தமது வாயை மூடிக்கட்டிக் கொண்டே புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரும்பாலும் இளம் வயதைச் சேர்ந்தவர்களே இந்த புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் எதுவும் வழங்கப்படாததனால் எதிர்காலத்தில் சுவாச நோய்,புகையூட்டல் இயந்திரத்தின் தொடர்ச்சியான சத்தத்தால் காதுகேட்காத தன்மை, பார்வைக்குறைபாடு என்பன ஏற்படக்கூடிய சாத்தியங்களும் உள்ளன.

எனவே புகையூட்டல் செயற்பாட்டின் போது தமக்குரிய பாதுகாப்புக் கவசங்களைப் பெற்றுத் தருமாறு நடைகண்டாய பணியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (54)

# குளிரின் தாக்கத்தால் கால்நடைகள் இறப்பு

(சண்டிலிப்பாய்)

தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக குடாநாட்டில் உள்ள கால்நடைகள் இறப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய்,கட்டுடை,சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலுள்ள ஆடுகள், மாடுகள் மற்றும் கோழிகளே இவ்வாறு இறப்பதனைக் காண முடிகின்றது.

தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட குளிரினால் நடக்க முடியாத நிலையில் ஓரிடத்தில் படுத்திருக்கும் இவைகள், சில நாட்களின் பின் இறந்து விடுகின்றன.

வயற்கரைகளிலுள்ள கால்நடைகளே அதிகம் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# ஒருவாரத்திற்கான பொருட்களே கையிருப்பில் உள்ளதாகத் தகவல்

(வவுனியா)

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாச 25 கிளைகளிலும் சுமார் ஒரு வாரத்திற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களே கையிருப்பிலுள்ளதாக சமாசப் பொது முகாமையாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

சகல கிளைகளும் திறக்கப்பட்டு மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. வவுனியா நகரிலுள்ள ஆலைகளில் அரிசியைக் கொள்முதல் செய்கின்றோம். ஆனாலும் போதியளவு அரிசி பெறமுடியாத நிலையிலுள்ளது.

மழையின் காரணமாக ஆலைகளை இயக்க முடியாதிருப்பதாகவும் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதாகவும் ஆலை உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கிடையில் பலத்த உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு வவுனியாவில் மிக மோசமான பட்டினிச்சாவு ஏற்படப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

தென்பகுதிக்கான தரை வழிப் பாதை பல இடங்களில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், பொருட்களை ஏற்றிக் கொண்டு லொறிகள் வர முடியாத நிலையேற்பட்டுள்ளதாக வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வெள்ளம் காரணமாக கடந்த நான்கு தினங்களாக கொழும்பிலிருந்து பொருட்கள் வராதபோதிலும், மாற்று வழியூடாகப் பொருட்கள் எடுத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவையான எரிபொருட்கள் ரயில் மூலம் வவுனியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் கூறினார்.

# தும்பளை புனித லூர்து அன்னை யாத்திரைத் தலத் திருவிழா

(பருத்தித்துறை)

தும்பளை புனித லூர்து அன்னையின் திருவிழாவிற்கு ஆயத்தமாக முதலாம் நவநாளாகிய பெப்ரவரி 02 ஆம் திகதி மாலை,பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக் கோட்ட முதல்வருமாகிய அருட்பணி ஜோன் மவுலிஸ் அடிகளார் லூர்து மாதாவின் திருவுருவக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. இவ் வழிபாடுகளின் போது அருட்பணி தேவராசா (அ.ம.தி) அடிகளார் ஆன்மீகத்தை நெறிப்படுத்தும் வகையில் உரைநிகழ்த்தி வருகிறார்.

இறுதி நாளாகிய 10-02-2011 அன்று மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி திருப்பலியும். திருவுரையும், திவ்விய நற்கருணை ஆராதனையும்,பவனியும் இடம்பெறும்.

11.02.2011 அன்று காலை 5.30 மணிக்கும் 7.30 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாத் திருப்பலியை,சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தல பரிபாலகர் அருட்பணி ஸ்ரனிபிலிப் (அ.ம.தி) அடிகளார் ஏனைய குருமாருடன் ஒப்புக் கொடுத்துச் சிறப்பிப்பார்.

இத்திருத் தலத்தில் யாத்திரீகர்கள் தங்குவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மா)

# இஸ்ரேலும் உதவி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு வெள்ள நிவாரண உதவியாக ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை இஸ்ரேல் அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றது. இஸ்ரேலின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான அமைப்பு Lsrael|s agency for Inematio nal Develiment Cooperation - mashav அந்தப் பொருட்களை இலங்கைக்கு கொண்டுவருகின்றதாம். இந்த நிவாரண உதவிகளில் பிரதானமாக குடிநீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் அடங்கியுள்ளதாகவும் இவை இஸ்ரேல் நிறுவனமான Concept என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டதை அடுத்து இசைமாலைத் தாழ்வு உட்பட்ட குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதைக் காணலாம்.

# படகுகள் மூலமாக உணவு விநியோகம்



(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் புத்தளம் கல்பிட்டியிலிருந்து விசைப்படகு மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இவற்றுள் அத்தியாவசிய சமையல் எண்ணெய், பால்மா உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களும் உள்ளடங்குவதாக அவர் எமது செய்திப் பிரிவுக்குத் தெரிவித்தார்.

இதுதவிர, எரிபொருட்களும் கடல் மார்க்கமாக சிலாவத்துறைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எதிர்வரும் 6 மாதங்களுக்கான உலர் உணவுப் பொருட்களை வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதவிர, அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முகமாக நிவாரணங்களை உரியமுறையில் வழங்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உலர் உணவுப்பொருட்களை விநியோகிப்பதற்காக அரசாங்கம் 800 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உலர் உணவுப்பொருட்களை பொதுமக்கள், கூட்டுறவு நிலையங்களிலும், கிராம சமூக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹொரணை வாகன விபத்தில் ஒருவர் பலி; 18 பேர் காயம்

(கொழும்பு)

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றும் டிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதிலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் சாரதி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் மேலும் காயமடைந்த 18பேரில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கவலைக்கிடமான சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்விபத்து சம்பந்தமான விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அத்தியாவசியப் பொருட்கள் வட பகுதிகளுக்கு தருவிப்பு

(வவுனியா)

வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்க சமாசத்தின் பொது முகாமையாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார். இது தொடர்பாக தெரிவிக் கையில்,

வவுனியாவில் தனியார் சந்தையில் சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனைச் சீர்செய்யும் நோக்கிலேயே இப்பொருட்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதைவிட சமாசத்தின் 25 கிளைகளில் தற்போது கையிருப்பில் உள்ள பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

சகல கிளைகளும் திறக்கப்பட்டு மக்களுக்கான விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதைவிட, வவுனியா நகரிலுள்ள அரிசி ஆலைகளில் தான் அரிசி கொள்வனவு செய்யப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

எனினும், தற்போது, போதியளவில் அரிசியைப் பெறமுடியாத நிலை உள்ளது. இதற்குத் தற்போது ஏற்பட்ட காலநிலை சீர்கேட்டினால் அரிசி ஆலைத் தொழிலாளர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதால், ஆலை வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதைவிட வெள்ளத்தினால் கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதிலும் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (39)

### மாத்தறையில் போலிக்கச்சேரி

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் உள்ளது போன்று ஆவணங்களைப் போலியாகத் தயாரித்து நடத்திச் செல்லப்பட்டு வந்த சட்டவிரோத கச்சேரி ஒன்றை மாத்தறை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த போலிக் கச்சேரியில் தயாரிக்கப்பட்ட கிராம சேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, விவாக மற்றும் மரணச் சான்றிதழ் என்பவற்றை மாத்தறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

### கலவை இயந்திரத்தில்.....

இனத்தவர்களெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் 15 வயதுச் சிறுவனொருவனும் அடங்குவதாக யாழ்.போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவத்தின்போது சீமெந்துக் கலவை இயந்திரத்திலிருந்து கலவை எடுக்கப்பட்டு மேல் செலுத்தும் இயந்திரத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது சீமெந்துக் கலவை இயந்திரத்தின் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே 8 பேர் காயமடைந்ததாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு :

அஸ்கர் (வயது-23) புத்தளம், ஜொனாப் (வயது-43) புத்தளம், அப்துல் ர.்.மான் (வயது-25) கிக்கிரிகொல்லாவ அநுராதபுரம், நியாஸ் (வயது-36) புத்தளம், டி.பி.கமல்சிறி - புத்தளம், எச்.எ.களு மதுரங்க (வயது 15) புத்தளம், எச்.எம்.சுமித் பியாதிலக (வயது-26) புத்தளம்.

இந்த விபத்தில் நெஞ்சுப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் புத்தளத்தைச் சேர்ந்த நிஹால் (வயது-28) ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (52)

### மனிதாபிமானப் பணியில்....

புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிகளுடன் கே.பி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளார். நேர்டோவின் கிளிநொச்சி அலுவலகத்தில் வைத்து போரின் போது கொல்லப்பட்ட புலிகளின் உறுப்பினர்கள் சிலரது மனைவிமாரை கே.பியும், அவரது குழுவினரும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

ஒட்டுசுட்டான் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அன்பு இல்லம் என்ற சிறுவர் இல்லத்திற்கும் இந்தத் தூதுக்குழுவினர் சென்றிருந்ததுடன், ஒட்டுசுட்டான் பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் இக் குழுவினர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்குச் சென்ற கே.பி தலைமையிலான குழுவினர் யாழ். நகரிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் யாழ்ப்பாண சமூகத்தின் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவது தான் தனது ஒரேயொரு நோக்கம் எனக் கே.பி இக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்கள் தங்களால் முடிந்தவரை கல்வியறிவினைப் பெறவேண்டிய தேவையினையும் அவர் இக் கூட்டத்தில் வலியுறுத்தி இருந்தார்.

பருத்தித்துறையில் அமைந்துள்ள நேர்டோவின் அலுவலகத்திற்குச் சென்ற இக் குழுவினர் அங்கு கூடியிருந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடினர்.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் கே.பி தற்போதும் வைக்கப்பட்டுள்ள போதிலும், இத்தகைய மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

நேர்டோ என்ற இவ்வமைப்பு அரசியல் கட்சியாகச் செயற்படுமா அல்லது கே.பி அரசியலில் ஈடுபடுத்தப்படுவாரா எனக் கேட்கப்பட்ட போது அதற்கான வாய்ப்புக்கள் எதுவுமில்லை என இந்த அதிகாரி மறுத்துள்ளார். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தனக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை எனக் கே.பி கூறியிருந்தார்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியினைப் பெற்று போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கும், புலிகளின் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு அமைப்பாகவே நேர்டோ செயற்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவிக்கின்றது.

கே.பி.க்கு புலிகளின் உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் சென்று வருவதற்கான அனுமதியினையும் இலங்கை அரசாங்கம் வழங்கியிருக்கிறது என இச்செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கரவெட்டியில்....

உயிரிழந்துள்ளார்.

இவர் பிரதேச செயலகத்திற்குள் நுழைந்து கொண்டிருந்த போதே பாரவூர்தி வேகக் கட்டுப்பாட்டையிழந்து பிரதேச செயலக மதிலுடன் மோதியுள்ளது.

மேலும், விபத்தில் கொல்லப்பட்டவர் வன்னியிலிருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அண்மையில் கரவெட்டி பிரதேசத்தில் மீள்குடியமர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (100)

### தேர்தல்....

வட மத்திய மாகாணங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன. அப்போது சில கட்சிகள் தேர்தலை ஒத்திவைக்குமாறு கேட்டும் தேர்தல் திகதி மாற்றப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக வேட்பாளர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்ல முடியாது உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வழமைக்குத்....

தற்போது நீர் வடிந்து காணப்படுவதால் ஓரளவு சீராகப் போக்குவரத்தினை மேற்கொள்ள முடிவதாகவும், யாழ்-கொழும்பு தனியார் பேருந்து சாரதிகள் தெரிவித்தனர். (27)

### யாழில் வேட்புமனுக்கள்.....

இம் மனுக்களில் பிரதிவாதிகளாக இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் பெயரிடப்பட்டுள்ளனர்.

வலிகாமம், கிளிநொச்சி, பருத்துத்துறை, யாழ்ப்பாணம், காரைநகர், சாவகச்சேரி ஆகிய நகர சபைகள், வேலணை பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு எனத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.


வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்சிப் பெயரில் தமிழ் மொழி பெயர்ப்பு தவறாகக் காணப்படுவதாகக் கூறி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி இவ் வேட்பு மனுக்களை நிராகரித்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தேர்தல் சட்டங்களுக்கு மாறானது என கூறியுள்ள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த், அதனை மீண்டும் ஏற்றுக் கொண்டு சட்ட ரீதியானது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தை அறிவிக்குமாறு கோரி மேன்முறையீடு செய்துள்ளார்.

### புலம்பெயர் தமிழர்களை....

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தீய சக்திகளை மௌனமாக்கும் வகையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வடக்குக் கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்பு வழங்க வேண்டும். இலங்கையின் அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்த தமிழ் சமுதாயத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



# சிறைச்சாலை வாசலில் இன்று சத்தியாக்கிரகம்

## வெலிக்கடையில் களமிறங்கும் ஜே.வி.பி.

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு இன்றுடன் ஒருவருடம் நிறைவடைவதை முன்னிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலை முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஜே.வி.பி முன்னனெடுக்கவுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இப் போராட்டத்திற்கு எதிர்க்கட்சியினருக்குத் தனியாக அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும், ஜனநாயகத்தை நேசிப்பவர்களும், சர்வாதிகாரப் போக்கை எதிர்ப்பவர்களும் கட்சி வேறுபாடின்றி கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். ஜே.வி.பி சார்பாக விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டும் அச்சுறுத்தல்கள் விடப்பட்டும் வருகின்றது. அதனைத்தடுக்க வேண்டுமாயின் அனைவரும் ஓர் அணியில் திரண்டு செயற்பட முன்வர வேண்டும்.

இன்றுடன் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இதனை முன்னிட்டும், அவரது விடுதலையை வேண்டியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வலிறுத்தியும் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜே.வி.பி எதிர்க்கட்சியுடன் ஒன்று சேர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கும் அதேசமயம் தனியாகவும் போராட்டங்களை முன்னெடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து ஓய்வுபெற்ற முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட்டிருந்தார்.

இத்தேர்தல் பரப்புரைக் காலங்களில் இவருடைய உரைகளும், செவ்விகளும் இலங்கை அரசாங்கத்தை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கி இருந்த நிலையில் இவர் தங்கியிருந்த விடுதியில் வைத்து இலங்கைப் படைத்தரப்பினரால் இரவோடிரவாக கைது செய்யப்பட்டார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிகளின் தலைவர்களை கோத்தபாய ராஜபக்ஷ சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டதாக சரத் பொன்சேகா வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்ததாக கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்ட செய்தி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட நிலையில் போரின் கதாநாயகனாகக் கருதப்பட்ட சரத் பொன்சேகா படைத்துறையில் இருந்து ஓய்வு பெற்ற இரு மாதங்களில் கைது செய்யப்பட்டார்.




## ஊடகவியலாளர் மீது காத்தான்குடியில் தாக்குதல்

காத்தான்குடிப் பிரதேசத்தை மையப்படுத்தி வெளிவரும் வார உரைகல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் புவி றஹ்மத்தல்லாஹ் இனந்தெரியாத நபர்களால் நேற்று திங்கட்கிழமை இரவு தாக்கப்பட்டுள்ளார். காத்தான்குடியிலுள்ள வீதியொன்றில் சென்று கொண்டிருந்த இவர். மீது மிளகாய் தூள் வீசப்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 2009 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதமும் இவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொன்சேகாவின் இடத்துக்கு ஜயந்த கெட்டகொட தெரிவு

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா சிறையிலடைக்கப்பட்ட பின்னர் வெற்றிடமான நாடாளுமன்ற ஆசனத்திற்கு அக்கட்சியின் அங்கத்தவர் ஜயந்த கெட்டகொடவின் பெயர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்ட ஐ.தே.மு. வேட்பாளர் பட்டியலில் பொன்சேகாவுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த லக்ஸ்மன் நிபுணாராய்ச்சியின் பெயர் வெற்றிடமான மேற்படி ஆசனத்திற்கு முதலில் பிரேரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆசனம் பொன்சேகாவுக்கு உரியது என நிபுணாராய்ச்சி கருதியதால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவில்லை.

அவர் எம்.பியாக பதவியேற்பதற்குரிய 3 மாத கால அவகாசம் முடிவடைந்துள்ளதால் ஜயந்த கெட்டகொடவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரும் எம்.பியாகப் பதவியேற்கப்போவதில்லை எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### - வெள்ளப்பாதிப்புக்குட்பட்ட மக்கள் -

## மட்டக்களப்பில் 105 நலன்புரி முகாம்களில் தங்கவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தொடர்ந்தும் சீரற்ற கால நிலையை அவதானிக்க கூடியதாக உள்ளது என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காலநிலை தொடர்பில் நாம் அவரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அவர் கருத்துத் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் சீரான காலநிலை நிலவிய போதும் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என 105 நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம்களிலே 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அத்துடன் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீட்டில் 18 ஆயிரம் குடும்பத்துக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர்.



தொடர்மழையின் காரணமாக மாவட்டத்தின் அனைத்து நீர்ப்பாசனக் குளங்களினதும் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் உலர் உணவுப் பொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது தொடர்பில் அனைத்து பிரதேச செயலாளர்களுடனும் தொடர்பு கொண்டு கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாடளாவிய ரீதியில் வெள்ளப்பாதிப்பு ஒரே பார்வையில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக தாக்கம் செலுத்தியுள்ள அசாதாரண காலநிலை காரணமாக 12 லட்சத்து 57 ஆயிரத்து 366 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ள இறுதி அறிக்கையின் படி இதுவரை இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 11 பேர் பலியாகினர்.

அதேவேளை, 8பேர் காயமடைந்த நிலையிலும், 3 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட அதிக மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அநுராதபுரம், திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், அவசர நிலைகள் காரணமாக இடம்பெயர்ந்த 3 லட்சத்து 25 ஆயிரத்து 408 பேர் 676 தற்காலிக இருப்பிடங்களில் தங்கியுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய ஊவா மாகாணங்களிலும் தென் மாகாணங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிபுணர் பிரீத்திகா ஜயக்கொடி எதிர்வு கூறியுள்ளார்.

அதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் நேற்றைய தினம் பாம்புக்கடிக்கு இலக்கான ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசம் ஒதுக்குபுறப் பகுதியாக காணப்படுவதாலும் அங்குள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க முடியாது போனதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இது தொடர்பில் அமைச்சுக்கு அறிவித்திருப்பதுடன் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாம் உதவிகளை வழங்கியதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முதலிபாபா பாரூக் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து நிவாரணப் பொருட்களை மன்னாருக்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கிட்டுனு தவமணி

நவாலி தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டுனு தவமணி 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆச்சிமுத்து தம்பதியினரின் மகளும், கிட்டுனுவின் அன்பு மனைவியும், ஜீவரட்ணத்தின் (Lucky House உரிமையாளர்) பாசமிகு தாயும், மேரி சுசிலாவின் அன்பு மாமியும், ஹெலன் சுஜீதா, கரோலின் சுஜனி, குயின்மேரி, ஸ்ரீபன்ராஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.02.2011 செவ்வாய் கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
T.P.0776257911

(C/102)

தகவல்
குடும்பத்தினர்.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC ஷாலோம் SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/418)
தொலைபேசி: 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.